டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 4.10.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 089 | Madurai | Online Edition

# கோவை, நீலகிரி, தேனியில் கனமழை வாய்ப்பு!

சென்னை, அக்.3

தமிழகத்தில் இன்று (அக்.4) கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. தெற்கு கடலோர ஆந்திர பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (அக்.4) கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், கரூர், திருச்சி, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நாளை ஒரு சில இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.

5, 6 தேதிகளில் கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழையும், திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தர்மபுரி,

கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், கரூர், திருச்சி, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர் மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில், மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

# வரும் 7ம் தேதி அஷ்வகந்தா சாகுபடி குறித்து ஒரு சிறப்பு பயிற்சி

திண்டுக்கல், அக்.3

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர், ICAR - தேசிய வணிக வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், வரும் 7-10-26 (புதன் கிழமை) அன்று காலை 10 மணி முதல் 2 மணி வரை அஷ்வகந்தா சாகுபடி குறித்து ஒரு சிறப்பு பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்வம் உள்ளவர்கள் 94295 43209 என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் செய்து பதிவு செய்து கொள்ளவும்.

(பின் குறிப்பு : பயிற்சி இலவசம், ஆனால் மதிய உணவு மற்றும் தேநீர் செலவுக்கு ரூ.100).

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் அங்கக வேளாண்மை கட்டண பயிற்சி

கோயம்புத்தூர், அக்.3

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச் சிமையத்தில் வருகின்ற புதன்கிழமை (07.10.26) அங்கக வேளாண்மை கட்டண பயிற்சி நடைபெற உள்ளது.

இந்த பயிற்சியில் அங்கக வேளாண்மையின் அடிப்படை நெறிமுறைகள், அங்ககக் களை மேலாண்மை, அங்கக பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அங்கக உர நிர்வாகம், அங்ககச் சான்றிதழ், அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் அங்கக விளைபொருள்களை சந்தைப்படுத்துதல் ஆகிய தலைப்புகளில் வகுப்புகளுடன் கூடிய செயல்விளக்கங்களும் நடைபெறும்.

இந்த பயிற்சிக்கான கட்டணம் ஜிஎஸ்டி உட்பட ரூபாய் 750 ஆகும்.

விருப்பமுள்ள விவசாயிகள் / பொதுமக்கள் 0422-2455055 / 6611206 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

நேரடியாகவும் வந்து பதிவு செய்து இந்த பயிற்சியில் கலந்து கொள்ளலாம் என்று நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# ஆத்மா திட்டத்தின் மூலம் அங்கக வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி

விழுப்புரம், அக்.3

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் வட்டார வேளாண்மைத் துறை சார்பில், ஆத்மா திட்டத்தின் கீழ் பாதிரி கிராமத்தில் விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை குறித்த ஒரு நாள் உள் மாவட்ட பயிற்சி நடந்தது.



உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் குமாரி ஆனந்தி தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிவசண்முகம் வரவேற்றார்.

திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜமுனா, ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம், மீன் அமிலம், ஐந்திலை கரைசல், பஞ்சகவ்யம், இஞ்சி பூண்டு கரைசல் உள்ளிட்ட அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து விளக்கினார். இதன் மூலம் மண்வளத்தை பாதுகாத்து, சாகுபடி செலவை குறைத்து தரமான விளை பொருட்களை உற்பத்தி செய்வது குறித்து ஆலோசனை வழங்கினார்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் சத்யா, திரவ நுண்ணுயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் சின்னதுரை நன்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் கோபிநாத், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சிட்டிபாபு, வீராசாமி மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தமிழகத்தைச் சேர்ந்த வேளாண் வல்லுநருக்கு ஹரித் புரஸ்கார் தேசிய விருது




புது தில்லி, அக்.3

வேளாண் கல்வி, ஆராய்ச்சி, புத்தகம், மாணவர் மேம்பாடு மற்றும் விவசாயிகள் நலனுக்காக சிறப்பாக தொடர்ந்து ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) கீழ் இயங்கும் திருச்சி, குமுளூர் வேளாண் கல்வி நிறுவனத்தில் பணியாற்றும் முனைவர். இரா. வினோத், உதவி பேராசிரியருக்கு (பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்கத்தின் (AIASA) தேசிய அளவிலான ஹரித் புரஸ்கார் (பசுமை விருது) 2024 விருது வழங்கப்பட்டது.

இந்த தேசிய விருது ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய வேளாண் மாணவர்கள் அமைப்பு புதுடெல்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் இணைந்து மத்திய உழவர் நல மற்றும் வேளாண் அமைச்சகம் ஆதரவுடன் தேசிய அளவில் வேளாண் துறையில் சிறப்பாக பங்களிப்பு அளித்து வரும் வேளாண் பேராசிரியர்கள், வல்லுநர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதுபோன்று இந்த வருடம் 2024ஆம் ஆண்டு மற்றும் 2025ஆம் ஆண்டுக்கான தேசிய விருது வழங்கப்பட்டது.

இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்ட இவ்விருது, வேளாண் துறையில் முனைவர் இரா.வினோத் மேற்கொண்டுள்ள சிறப்பான மற்றும் தொடர்ச்சியான பங்களிப்புகளுக்காக வழங்கப் குபட்டுள்ளது. குறிப்பாக, வேளாண் ஆராய்ச்சி, புத்தாக்கம், வேளாண் வளர்ச்சி, மாணவர்கள் மற்றும் இளம்

வேளாண் பட்டதாரிகளின் திறன் மேம்பாடு, விவசாயிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்களின் முன்னேற்றம் ஆகிய துறைகளில் அவர் மேற்கொண்ட பணிகள் குறிப்பிடத்தக்கவை.

இந்த தேசிய விருது கடந்த வாரம் செப்டம்பர் 21ம் தேதி, 2026 அன்று புதுதில்லியில் உள்ள பிஎச்டி வர்த்தக மற்றும் தொழில் வளாகத்தில் நடைபெற்ற அங்கக மற்றும் இயற்கை நெல் உற்பத்தி முறைகள் குறித்த 5வது சர்வதேச மாநாட்டின் (21 முதல் 25 செப்டம்பர் 2026 வரை) நிகழ்வில் வழங்கப்பட்டது.

இம்மாநாடு அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்கத்தின் (AIASA), வேளாண் அறிவியல் பல்கலைக்கழகம், ராய்ச்சூர் மற்றும் ஐபிபீ பல்கலைக்கழகம், இந்தோனேசிய ஆகியவற்றின் கூட்டு ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் டாக்டர் சத்யபால் சிங், மேனாள் மத்திய மனித வள மேம்பாடு மற்றும் உயர்கல்வித் துறை இணை அமைச்சர் பத்ம பூண் டாக்டர் ஆர்.பி.சிங், மேனாள் வேந்தர், மத்திய வேளாண் பல்கலைக்கழகம், பத்மஸ்ரீ டாக்டர் ஏ.கே.சிங், மேனாள் இயக்குநர், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், டாக்டர் ஆர்.பி.சிங், மேனாள் செயலாளர், அகில இந்திய வேளாண்மை பல்கலைக்கழகங்கள் அமைப்பு, பேராசிரியர் ஸ்டெபனோ போச்சி, மிலன் பல்கலைக்கழகம், இத்தாலி, பேராசிரியர் கேய்ச்சி இஷிய், பல்கலைக்கழகம், ஜப்பான் பேராசிரியர் சஹுதேவ் சிங், உள்ளிட்ட பல்வேறு துறைசார் சிறப்பு விருந்தினர் களாக கலந்து கொண்டு இவ்விருதினை வழங்கினார்கள்.

தேசிய அளவில் கிடைத்துள்ள இவ்விருது, வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறையில் மேலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கான ஊக்கமாக அமைந்துள்ளதாக முனைவர் இரா.வினோத் தெரிவித்தார். விவசாயிகள், கிராமப்புற இளை–ஞர்கள், வேளாண் மாணவர்கள் மற்றும் எதிர்கால வேளாண் வல்லுநர்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பணியாற்றுவதே இவ்விருதின் மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள புதிய பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்விருது தனிப்பட்ட சாதனை மட்டுமல்ல, வேளாண் சமூகத்திற்கும் விவசாயிகளுக்கும் இளைஞர்களுக்கும் தொடர்ந்து சேவை செய்ய வேண்டிய பொறுப்பை மேலும் அதிகரிக்கிறது என டாக்டர் ஆர்.வினோத் தெரிவித்துள்ளார்.

முனைவர் இரா.வினோத் இந்த விருது பெறுவதற்கு உறுதுணையாக இருந்த தனது மனைவி பிரியா மற்றும் குழந்தைகள் நேகா ஸ்ரீ, புகழ் அமுத சோழன், வேளாண் கல்வி நிறுவன முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்தார்.

இந்த விருது பெறுவதற்கு உறுதுணையாக இருந்த தனது பெற்றோர்கள் ( ராமு, லட்சுமி ) மற்றும் தமிழக விவசாயிகள் அனைவருக்கும் இவ்விருதனை சமர்ப்பிப்பதாக கூறினார்.



# வேளாண்மையில் ட்ரோன் தொழில்நுட்பம் குறித்த ATMA பயிற்சி



கன்னியாகுமரி, அக்.3

குமரி மாவட்டம், ராஜாக்க மங்கலம் வட்டாரம், வேம்பனூர் பகுதியில் உள்ள பெருஞ்செல்வ விளை கிராமத்தில் வேளாண்மையில் ட்ரோன் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் ATMA சார்பில் மாவட்ட அளவிலான பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் ட்ரோன் தொழில்நுட்பம், வேளாண் இயந்திரமயமாக்கல், நவீன வேளாண் தொழில் நுட்பங்கள், டிஜிட்டல் வேளாண்மை மற்றும் அரசு திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பி.பொன்ராணி தலைமை வகித்து, வேளாண்மையில் ட்ரோன் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விளக்கினார்.

வேளாண்மை இணை இயக்குநர் வாணி, வேளாண் இயந்திரமயமாக்கல் மற்றும் வேளாண்மைத் துறையின் பல்வேறு அரசு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

வேளாண் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த முனைவர் லதா, நெற்பயிரில் ஊட்டச்சத்து மேலாண்மை, நானோ உரங்களின் பயன்பாடு மற்றும் சுருள் வெள்ளை ஈ பூச்சியை இரை விழுங்கிகள் மற்றும் ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து தொழில்நுட்ப விளக்கமளித்தார்.

மலரியல் ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் முனைவர் தி.ராஜ்பிரவீன், பாரம்பரிய நெல் சாகுபடி முறைகள் மற்றும் பாரம்பரிய நெல் ரகங்களை சாகுபடி செய்வதன் பொருளாதார நன்மைகள் குறித்து விளக்கினார். மேலும், நெல் சாகுபடியுடன் கோழி மற்றும் மீன் வளர்ப்பை ஒருங்கிணைத்து மேற்கொள்ளும்

ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் குறித்தும் விளக்க மளித்தார். விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வெளியிடும் மாத இதழ் உழவரின் வளரும் வேளாண்மை பற்றியும் விளக்கி கூறினார்.

வேளாண்மைப் பொறியியல் துறை உதவிப் பொறியாளர், வேளாண்மையில் ட்ரோன்களின் பயன்பாடு, ட்ரோன் தொடர் பான அரசு திட்டங்கள், பயனாளிகளுக்கான தகுதிகள் மற்றும் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். வேளாண்மை அலுவலர் குப்புசாமி, டிஜிட்டல் வேளாண்மை செயலிகளின் பயன்பாடுகள் மற்றும் அவற்றின் மூலம் விவசாயிகள் பெறக்கூடிய சேவைகள் குறித்து விளக்கினார். மேலும், வட்டார அளவில் செயல் படுத்தப்பட்டு வரும் பல்வேறு வேளாண்மைத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். தொடர்ந்து, ட்ரோன் பைலட் மௌனிஷ் தலைமையில் வயல்வெளியில் நேரடி ட்ரோன் செயல்விளக்கம் நடைபெற்றது. இதில் வேளாண் பணிகளில் ட்ரோன்களை இயக்கி பயன் படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு நேரடியாக விளக்கிக் காட்டப்பட்டது.

இவ்விழாவில் மிகவும் ஆர்வமுடன் கலந்து கொண்ட முன்னோடி விவசாயி சிறுமணி, வாணிக்கு ஊக்குவிக்கும் வண்ணம் உழவரின் வளரும் வேளாண்மை பரிசாக வழங்கப் பட்டது.

இப்பயிற்சி நிகழ்ச்சியை ATMA வட்டார தொழில்நுட்ப மேலாளர் (BTM) சௌமியா, ATM அஜிஷ் மற்றும் ஷீலா ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர். இப்பயிற்சியின் மூலம் விவசாயிகள் ட்ரோன் தொழில்நுட்பம், வேளாண் இயந்திரமயமாக்கல், ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், டிஜிட்டல் வேளாண்மை மற்றும் அரசு திட்டங்கள் குறித்து பயனுள்ள தொழில்நுட்ப அறிவைப் பெற்றனர்.



# தகவல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை குழு கூட்டம்

விழுப்புரம், அக்.3

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டாரம், ஆத்மா திட்டத்தில் வட்டார தகவல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை குழு கூட்டம் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் வேளாண்மை உதவி ஆரோக்கிய ராஜ் தலைமையில் நடைபெற்றது.




விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் குமாரி ஆனந்தி உழவர் பயிற்சி நிலையம் மற்றும் அட்மா திட்டம் கலந்து கொண்டு தகவல் மற்றும் ஆலோசனை குழு உறுப்பினர்களின் செயல்பாடுகள் குறித்தும் வட்டார அளவில் வேளாண்மை மற்றும் சகோதரத்துவ துறைகளுக்கும் தேவையான தொழில் நுட்பங்கள் மற்றும் ஆலோசனைகளை கூட்டத்தின் மூலம் பெற்று பயனடைவது குறித்தும் விளக்கி கூறினார்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியராஜ் ஆலோசனைக் குழு உறுப்பினர்களிடம் கலந்துரையாடல்களின் மூலம் கருத்துக்களை பெற்று ஆலோசனை வழங்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நரசிம்மராஜ் 2026- 27 ஆண்டிற்கான ஆத்மா திட்டத்தில் வரப்பெற்ற இனங்கள் குறித்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் கவிதா வேளாண் விற்பனை துறையில் விவசாய தொழில் முனைவோருக்கான மானிய திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சந்திரசேகர் மற்றும் அய்யனார் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பயிர்கள் செழிப்பாக வளர திரவ பொட்டாஷ் பாக்டீரியா (உயிர் உரம்)




பொதுவாக பயிர் வளர்ச்சிக்கு தேவையான முக்கிய மூன்று சத்துகளில் (தழை மணி, சாம்பல்) சாம்பல் சத்தான பொட்டாஷ் உரமும் முக்கியமானது. நமது மண்ணில் சாம்பல் சத்து (K) அதிக அளவில் தான் உள்ளது. ஆனால் மண்ணிலிருந்து 2% சாம்பல் சத்து மட்டுமே பயிர்கள் எடுத்துக் கொள்ளு கின்றன.

எனவே மண்ணில் கட்டுண்டு கிடக்கும் சாம்பல் சத்தை மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள் பல்வேறு செயல் திறன்களால் அமிலத்தை உற்பத்தி செய்து, நீரில் கரையும் சாம்பல் சத்தாக (பொட்டாஷ்யாக) மாற்றி பயிர்களுக்கு தர உதவுவது தான் இந்த திரவ வடிவலான பொட்டாஷ் பாக்டீரியா (LIQUID POTASH BACTERIA).

**செயல் திறன்?**

இந்த பொட்டாஷ் பாக்டீரியா மண்ணில் வெப்ப நிலை 15 டிகிரிலிருந்து 42 டிகிரி செல்சியஸ் வரை நன்கு வளரக்கூடியது. இது குறைந்தபட்ச அமிலத்தன்மை (PH 3.5) உள்ள மண்ணிலும் அதிகபட்ச காரத்தன்மை மண்ணிலும் (PH 11) வரை மண்ணிலும் தாங்கி வளரக்கூடியது. இந்த நுண்ணுயிர் (BACTERIA) மண்ணில் அதிக அளவு உவர் தன்மை இருந்தாலும் கூட நன்றாக வளரக்கூடியது. இந்த நுண்ணுயிர் பாக்டீரியா மற்றும் பூஞ்சானங்களால் உண்டாகும் நோய் களிலிருந்து பயிர்களை பாதுகாத்து, பயிர்களுக்கு நோய் எதிர்ப்பு திறனை (RESISTANT) அதிகரிக்கிறது. பயிர்களில் வளர்ச்சிஊக்கிகளை உற்பத்தி செய்து பயிர்கள் செழிப்பாக வளர உதவுகின்றன இதனால் மகசூல் 25% அதிகரிக்கிறதாக தரவுகள் உள்ளன.

**பயன்படுத்துதல்**

அடியுரமாகவும் இலைவழி தெளிப்பாகவும் வேரில் ஊற்றுதல் போன்ற வழிகளில் இதை பயன்படுத்திடலாம். தற்போது பொட்டாஷ் உரம் விலை உயர்ந்துள்ளதால் (1800/50 கிலோ) அதற்கு மாற்றாக இந்த திரவ வடிவலான பொட்டாஷ் பாக்டிரியாவை பயன்படுத்தலாம் / செலவும் குறையும் சுற்றுப்புறமும் பாதுகாக்கபடும்.

**எங்கே கிடைக்கும்?**

அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களில் 500 மி.லி கொள்ளளவு கொண்ட பாட்டில் வடிவத்தில் கிடைக்கிறது. சில திட்டங்களில் மானிய விலையிலும் கிடைக்கிறது.

மண்ணை ஆரோக்கியமாக வைத்திருக்க, உரங்களை போடாமல் திரவ வடிவலான உயிர் உரங்களை (BIO FERTIL-IZERS) வாங்கி பயன்படுத்திட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# எதிர்கால விவசாயிகளை வேளாண் தொழில்முனைவோராக உருவாக்கும் புதிய முயற்சி

## ஆர்என்ஆர் அக்ரி டெவலப்பர்ஸ் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம் இடையே மாணவர் இன்டர்ன்ஷிப் ஒப்பந்தம்

மதுரை, அக்.3

வேளாண் ஆலோசனை மற்றும் இடுபொருட்கள் துறையில் செயல்பட்டு வரும் ஆர்.என்.ஆர் அக்ரி டெவலப்பர்ஸ் நிறுவனமும், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியல் பள்ளியும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன.

வேளாண் மாணவர்களுக்கு நிறுவனத்தில் இன்டர்ன்ஷிப் வாய்ப்பு வழங்கி, அவர்களை எதிர்காலத்தின் திறமையான வேளாண் தொழில்முனைவோராக (அக்ரிப்ரனர்) உருவாக்குவதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம்.

## ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்கள்

வேளாண் மாணவர்களுக்கு நேரடி களப் பயிற்சியுடன் கூடிய இன்டர்ன்ஷிப் வாய்ப்புகளை வழங்குதல், மண் வளம், நீர்ப்பாசனம், பயிர் மேலாண்மை, இயற்கை இடுபொருட்கள் ஆகியவற்றில் செயல்முறை அனுபவம் அளித்தல், வேளாண் தொழில் தொடங்கத் தேவையான திட்ட அறிக்கை தயாரித்தல், சந்தைப்படுத்துதல், நிதி மேலாண்மை பற்றிய வழிகாட்டுதல் வழங்குதல், காலநிலைக்கு ஏற்ற, நிலைத்த வேளாண் முறைகளை இளம் தலைமுறையிடம் கொண்டு சேர்த்தல்.

இன்றைய வேளாண் துறைக்குப் புத்தகக் கல்வி மட்டும் போதாது; வயல்வெளி அனுபவமும் தொழில்முனைவுத் திறனும் அவசியம். காலநிலை மாற்றம், மண் வளக் குறைவு, நீர் பற்றாக்குறை போன்ற சவால்களை எதிர்கொள்ள, துணிவும் அறிவும் கொண்ட இளம் விவசாயிகள் தேவைப்படுகிறார்கள். இன்டர்ன்ஷிப் காலத்தில் மாணவர்கள் விவசாயிகளுடன் நேரடியாகப் பணியாற்றுவதால், களச் சிக்கல்களைப் புரிந்து கொண்டு அறிவியல் அடிப்படையிலான தீர்வுகளை வழங்கக் கற்றுக்கொள்வார்கள். இதன் மூலம் வேலை தேடுபவர்களாக மட்டுமின்றி, வேலை உருவாக்குபவர்களாகவும் அவர்கள் வளர முடியும்.

ஆர்.என்.ஆர் அக்ரி டெவலப்பர்ஸ் நிறுவனம் வேளாண் ஆலோசனை, இயற்கை மற்றும் உயிரி இடுபொருட்கள், விவசாயிகள் பயிற்சி, வேளாண் இயந்திரங்கள், நிலத்தோற்ற ஆலோசனை, தமிழில் வேளாண் விழிப்புணர்வு உள்ளடக்கம் ஆகிய துறைகளில் செயல்படுகிறது. இத்தகைய பல்துறை அனுபவம் மாணவர்களுக்கு முழுமையான தொழில் பார்வையை அளிக்கும்.

இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவும் வழிகாட்டுதலும் அளித்த தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர், வேளாண் அறிவியல் பள்ளி முதன்மையர் முனைவர் மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி. இளைய தலைமுறையின் கைகளில் வேளாண்மையின் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன், இணைந்து செயல்படுவோம்.

இதனை டாக்டர் ராஜேஷ் நல்லையா, நிறுவனர் & தலைமை நிர்வாக அதிகாரி, ஆர்.என்.ஆர் அக்ரி டெவலப்பர்ஸ், மதுரை தெரிவித்தார்.

# தோட்டக்கலைத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

தென்காசி, அக்.3

கிராமப்புற தோட்டக்கலைப் பணி அனுபவத் திட்டத்தின் (யூகூஷிநிசி) ஒரு பகுதியாக, கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள், தோட்டக்கலைத் துறையை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும்






பல்வேறு திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், வாசுதேவநல்லூர், நாராணாபுரத்தில் தோட்டக்கலைத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்தனர்.

இந்நிகழ்ச்சியில், மத்திய அரசு மற்றும் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள், தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் திட்டங்கள் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு சுருக்கமாகவும் நடைமுறைப் பயனுள்ள தாகவும் தகவல்கள் வழங்கப்பட்டன. இத்திட்டங்களின் நோக்கங்கள், வழங்கப்படும் உதவிகள் மற்றும் தோட்டக்கலை வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவம் ஆகியவை விளக்கப் பட்டன. மேலும், உற்பத்தித் திறனை அதிகரித்தல், வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி சாகுபடி முறைகளை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்காக, தங்களுக்குப் பொருத்தமான அரசு உதவித் திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியமும் எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்வின் மூலம் அறிவுப் பரிமாற்றம் சிறப்பாக நடைபெற்றது. மேலும், தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்கள் கிராமப்புற அளவில் நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன மற்றும் அவற்றின் பயன்கள் என்ன என்பதைக் கற்றுக்கொள்ள மாணவர்களுக்கு இந்நிகழ்ச்சி பயனுள்ள கள அனுபவத்தை வழங்கியது.

இந்நிகழ்ச்சியை M.அபர்ணா உன்னிதன், ககனி ரசக்ணா, கார்த்திகா ஸ்ரீ M மற்றும் G.அனிதா ஆகிய மாணவர்கள், பாடநெறி ஆசிரியர் Dr. S. விஜயகுமார் மற்றும் குழு ஒருங் கிணைப்பாளர் Dr. V. விஜய பிரபா ஆகியோரின் வழிகாட்டு தலின் கீழ் நடத்தினர்.

மேலும், தோட்டக்கலை உதவி இயக்குநர் P.ராஜா ஆதரவு மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெல் தன் வரலாறு கூறுதல்

**முன்னுரை**

உணவே உயிர், அந்த உணவின் உயிர்நாடி நான்!

நான் தான் நெல் பேசுகிறேன். மனிதர்கள் என்னை 'அரிசி' என்றும், 'சோறு' என்றும் பல பெயர்களில் அழைக்கிறார்கள். என் வாழ்வின் பயணத்தையும், நான் கடந்து வரும் பாதையையும் உங்களிடம் பகிர்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



நான் ஒரு புல் வகையைச் சேர்ந்த தாவரமாவேன். மனித குலத்தின் மிகப் பழமை யான உணவுப் பயிர் களில் ஒ ன் ற ா க வு ம் , உலகமக்களின் முக்கிய உணவாகவும் விளங்கும் பெருமை எனக்கு உண்டு. குறிப்பாக இந்தியர்களின் உணவிலும், தமிழர்களின் பண்பாட்டிலும், விவசாய வாழ்க்கையிலும் நான் பிரிக்க முடியாத இடத்தைப் பெற்றிருக்கிறேன்.

ஒரு சிறிய விதையாகத் தொடங்கி, பசுமையான நாற்றாக வளர்ந்து, பொன்னிறக் கதிராகி, இறுதியில் மனிதனின் உணவாக மாறும் என் வாழ்க்கைப் பயணம் மிகவும் நீண்டது. என் பின்னால் ஒரு விவசாயியின் வியர்வையும், இயற்கையின் அருளும், அறிவியலின் வளர்ச்சியும் இருக்கின்றன.

**என் பிறப்பும் வளர்ச்சியும்**

என் வாழ்க்கை ஒரு சிறிய விதையிலிருந்து தொடங்குகிறது. விவசாயி நல்ல தரமான விதைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை விதைப்பதற்குத் தயார்படுத்துகிறார். பின்னர் அவை நாற்றங்காலில் விதைக்கப்படுகின்றன. சில நாட்களில் சிறிய பச்சை நாற்றுகளாக நான் முளைக்கிறேன்.



## திருந்திய நெல் சாகுபடி செம்மை நெல் சாகுபடி விவசாயம்

நாற்றுகள் வளர்ந்ததும், விவசாயி அவற்றை கவனமாக எடுத்து, நன்கு உழுது சமப்படுத்திய வயலில் நடவு செய்கிறார். சூரியஒளி, நீர், மண்வளம், காற்று மற்றும் உரச்சத்துக்கள் எனது வளர்ச்சிக்கு அடிப்படையாகின்றன.



என்னைச் சுற்றி களைகள் வளரும் போது அவை என் உணவு மற்றும் நீருக்குப் போட்டியிடுகின்றன. எனவே விவசாயிகளை களை அகற்றி, தேவையான அளவு உரமிட்டு, பூச்சி மற்றும் நோய்களிலிருந்து என்னைப் பாதுகாக்கிறார்.

நாட்கள் செல்லச் செல்ல நான் உயரமாக வளர்கிறேன். என் தண்டின் மேல் கதிர்கள் தோன்றுகின்றன. அந்தக் கதிர்களுக்குள் சிறிய நெல்மணிகள் உருவாகின்றன. அவை நாளடைவில் முற்றி, என் பச்சைக் கதிர்கள் பொன்னிறமாக மாறுகின்றன. அப்போது நான் அறுவடைக்குத் தயாராகிறேன்.

### விதையிலிருந்து உணவு வரை

அறுவடை செய்யப்பட்ட என்னை உலர்த்தி, சுத்தப்படுத்தி, சேமிக்கின்றனர். பின்னர் என் உமி நீக்கப்பட்டு அரிசியா கமாற்றப்படுகிறது. அந்த அரிசியிலிருந்து சாதம், இட்லி, தோசை, பொங்கல், பிரியாணி, அவல், பொரி போன்ற எண்ணற்ற உணவுகள் உருவாகின்றன. அதனால் நான் ஒரு தானியம் மட்டுமல்ல; மனிதனின் அன்றாட உணவின் அடிப்படை.

தமிழர்களின் வாழ்க்கையிலும் எனக்கு தனிச்சிறப்பு உண்டு. தமிழர்களின் அறுவடைத் திருநாளான தைப் பொங்கல் என்னை மையமாகக் கொண்டாடப்படும் பெருவிழாவாகும். புதிய நெல்லில் கிடைத்த அரிசியைக் கொண்டு பொங்கல் செய்து, இயற்கைக்கும் உழவனுக்கும் நன்றி செலுத்துகின்றனர்.

பொங்கலோ பொங்கல்! என்று மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் போது, என் பயணத்தின் பெருமையை நான் உணர்கிறேன்.

**என் பாரம்பரிய சாகுபடி வாழ்க்கை**



முன்பு என்னை வளர்ப்பது மிகவும் கடினமான பணியாக இருந்தது. விவசாயிகள் மாடுகளைப் பயன்படுத்தி வயலை உழுதனர். கைகளால் நாற்று பறித்து, வயலில் நடவு செய்தனர். களைகளை கைகளால் அகற்றினர். அறுவடையையும் மனித உழைப்பைக் கொண்டே செய்தனர். அந்தக் காலத்தில் விவசாயியின் உழைப்பு அதிகம்; நேரமும் அதிகம். ஆனால் விவசாயியின் அன்பும் பொறுமையும் என்னை வளர்த்தன. விவசாயியின் வியர்வைத் துளிகளில் தான் என் ஒவ்வொரு நெல் மணியும் உருவானது.



**நெல் தமிழ் விக்கிப்பீடியா**



**என் நவீன சாகுபடி வாழ்க்கை**

காலம் மாறிவிட்டது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி என் சாகுபடியிலும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்று முதலில் மண் பரிசோதனை செய்யப்படுகிறது. மண்ணில் உள்ள சத்துக்களை அறிந்து அதற்கேற்ப உரமிடுகின்றனர். இதனால் உரச்செலவைச் சிக்கனப்படுத்தவும், மண் வளத்தைப் பாதுகாக்கவும் முடிகிறது. மேலும், அதிக மகசூல், குறுகிய கால அறுவடை, நோய் எதிர்ப்பு, வறட்சி மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறன் போன்ற பண்புகளைக் கொண்ட மேம்படுத்தப்பட்ட இரகங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

**இயந்திர நடவு**



நெல் நாற்றுகளை நடவு செய்ய இயந்திரங்களை ஓட்டும் கிராமவாசிகள்

முன்பு கைகளால் செய்யப் பட்ட நடவுப் பணியை இன்று

நெல் நடவு இயந்திரம் போன்ற இயந்திரங்கள் விரைவாகச் செய்கின்றன. இதனால் நேரமும் தொழிலாளர் தேவையும் குறைகிறது.

### நேரடி நெல் விதைப்பு – DSR



இயந்திர சாகுபடியில் களமிறங்கும் நெல்லை சுற்று வட்டார விவசாயிகள் உருளை விதைப்பான் மூலம் நெல் விதைப்பு பணி தீவிரம்

நேரடி நெல் விதைப்பு (Direct Seeded Rice) முறையில் நாற்றங்காலில்நாற்று வளர்த்து நடவு செய்வதற்குப் பதிலாக விதைகள் நேரடியாக வயலில் விதைக்கப்படுகின்றன. இதனால் நாற்றங்கால் மற்றும் நடவு பணிகளில் தேவையான உழைப்பு குறையலாம்.

### திருந்திய நெல் சாகுபடி – SRI

### நெல் சாகுபடியில் கவலை தரும் களை




திருந்திய நெல் சாகுபடி (System of Rice Intensification) முறையில் இளம் நாற்றுகள் குறிப்பிட்ட இடைவெளியில் நடவு செய்யப்பட்டு, களையெடுப்பு மற்றும் நீர் மேலாண்மை முறையாக மேற்கொள்ளப்படுகிறது. இதன் நோக்கம் வலுவான வேர் வளர்ச்சியையும் சிறந்த பயிர் வளர்ச்சியையும் பெறுவதாகும்.

### நீர் மேலாண்மை

என்னை எப்போதும் அதிக நீரில் மூழ்கடித்து வளர்க்க வேண்டிய அவசியமில்லை. மாற்றி மாற்றி ஈரமாக்கி உலர்த்தும் பாசன முறை (Alternate Wetting and Drying ) போன்ற நீர் மேலாண்மை முறைகளில் வயலின் தேவைக்கேற்ப நீர் வழங்கப்படுகிறது. இதன் மூலம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது.

## ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (Integrate Pest Management) முறையில் வயலைத் தொடர்ந்து கண்காணித்து, பொறிகள், உயிரியல் கட்டுப்பாடு போன்ற முறைகளைப் பயன் படுத்துகின்றனர். தேவையான போது மட்டுமே பொருத்தமான பயிர் பாதுகாப்புப் பொருட்களைப் பயன்படுத்துவது முக்கியம்.

## ட்ரோன் மற்றும் துல்லிய வேளாண்மை

**ட்ரோன் மூலம் விவசாயம் செய்தால் மானியம் அறிவித்த மாநில அரசு**



இன்று தொழில்நுட்பம் என் வயலுக் குள்ளும் வந்துவிட்டது. ட்ரோன்கள் மூலம் வயலைக் கண்காணிக்கவும், சில வேளாண் பணிகளைச் செய்யவும் முடிகிறது. சென்சார்கள் மூலம் மண் ஈரப்பதம் மற்றும் பயிரின் நிலையை கண்காணிக்க முடிகிறது. செயற்கைக் கோள் தரவுகள், சென்சார்கள், உலக ளாவிய நிலை கண்டறியும் அமைப்பு (GPS) மற்றும் தரவு பகுப்பாய்வு ஆகியவற்றை இணைத்து செய்யப்படும் துல்லிய வேளாண்மை ( Precision Agriculture )எதிர்கால நெல் சாகுபடியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

## உலக அரங்கில் நான்

நான் ஒரு நாட்டின் உணவு மட்டுமல்ல. இன்று உலகளாவிய வர்த்தகப் பொருளாகவும் விளங்குகிறேன். ஆசிய நாடுகள் உலக நெல் உற்பத்தியின் மிகப்பெரிய மையமாக உள்ளன. இந்தியா, சீனா, வங்கதேசம், இந்தோனேசியா, வியட்நாம் போன்ற நாடுகள் உலக நெல் உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சமீபத்திய உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் புள்ளி விவரத் தரவுத் தளம் (FAO) 2024 வரையிலான பயிர் உற்பத்தி மற்றும் அறுவடைப் பரப்புத் தரவுகளை வழங்குகிறது. இந்திய அரசின் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) தவலின்படி, 2024-ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய நெல் உற்பத்தியாளராக இந்தியா இருந்தது.

## இந்தியாவில் என் பெருமை

இந்தியா என் தாயகங்களில் மிக முக்கியமான ஒன்றாகும். இந்தியாவில் 2024-25ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 150.18 மில்லியன் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் முக்கிய நெல் உற்பத்தி மாநிலங்களில் உத்தரப்பிரதேசம், தெலங்கானா, மேற்குவங்காளம், பஞ்சாப், சத்தீஸ்கர், ஒடிசா, மத்தியப்பிரதேசம், பீகார், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை அடங்குகின்றன.



இந்தியாவின் முன்னணி நெல் உற்பத்தி மாநிலங்கள்

| மாநிலம் | 2024-25 தேசிய உற்பத்திப் பங்கு |
|---|---|
| உத்தரப்பிரதேசம் | 13.82% |
| தெலங்கானா | 11.62% |
| மேற்குவங்காளம் | 10.67% |
| பஞ்சாப் | 9.56% |
| சத்தீஸ்கர் | 6.90% |
| ஒடிசா | 6.34% |
| மத்தியப்பிரதேசம் | 6.07% |
| பீகார் | 5.53% |
| ஆந்திரப்பிரதேசம் | 5.43% |
| தமிழ்நாடு | 4.72% |

அதிக மொத்த உற்பத்தியில் உத்தரப்பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாடும் இந்தியாவின் முக்கிய நெல் உற்பத்தி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

**உலக ஏற்றுமதியில் இந்தியா**

என் பயணம் வயலைத் தாண்டி கடல்களையும் கடக்கிறது. இந்தியா 2012 முதல் உலகின் மிகப்பெரிய நெல் ஏற்றுமதி யாளராக இருந்து வருகிறது என்று வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) குறிப்பிடுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் உலக நெல் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு சுமார் 30 – 35% அளவில் இருந்துள்ளது.

**2024-25ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த நெல் ஏற்றுமதி : 20.19 மில்லியன் மெட்ரிக் டன். மதிப்பு : US$ 12.47 பில்லியன் என இருந்தது.** முக்கிய ஏற்றுமதி சந்தைகளில் சவுதிஅரேபியா, பெனின், ஈராக், ஈரான், கினியா, கோட்டி’வாயர், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் டோகோ ஆகியவை இடம் பெற்றன.

**என் புகழ் பெற்ற இரகங்கள்**

எனக்கு உலகம் முழுவதும் பல்வேறு வடிவங்களும் பண்புகளும் கொண்ட ஆயிரக்கணக்கான இரகங்கள் உள்ளன.

**இந்தியாவில் பிரபலமான சில இரகங்கள்**

- Pusa Basmati 1121 — பூசாபாஸ்மதி 1121
- Pusa Basmati 1509 — பூசாபாஸ்மதி 1509
- Pusa Basmati 1718 — பூசாபாஸ்மதி 1718
- Basmati 370 — பாஸ்மதி 370

| | |
|---|---|
| ● Samba Mahsuri – BPT 5204 | சாம்பாமஹ்சூரி BPT 5204 |
| ● Swarna | ஸ்வர்ணா |
| ● IR 64 | ஐ.ஆர். 64 |
| ● Sona Masuri | சோனாமசூரி |
| ● Ponni | பொன்னி |
| ● Jeera Samba | ஜீரக சம்பா |
| ● Kolam | கோலம் |
| ● Kalanamak | காளாநமக் |

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் (ICAR) பதிவின்படி பூசா பாஸ்மதி 1121 மிக முக்கியமான ஏற்றுமதி Basmati இரகமாகவும், அதிக வெளிநாட்டுவருவாய் ஈட்டும் இரகமாகவும் குறிப்பிடப்படுகிறது. பூசா பாஸ்மதி 1509 குறுகிய காலத்தில் முதிரக்கூடிய பாஸ்மதி இரகமாகும். ICAR வரலாற்றுப் பதிவில் சாம்பா மசூரி (BPT 5204) மற்றும் ஸ்வர்ணா ஆகியவை சிறப்புரகங்கள் என குறிப்பிடப்படுகின்றன; ஐ.ஆர். 64 பரவலாகப் பயிரிடப்பட்ட முக்கிய இரகமாகவும் பதிவாகியுள்ளது.

**Pusa Basmati 1121 என் ஏற்றுமதி நட்சத்திரம்**



என் குடும்பத்தில் உலக சந்தையில் தனித்துவமான புகழைப் பெற்ற ஒன்று பூசாபாஸ்மதி 1121.

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் தகவலின்படி, இது மிக நீளமான மெல்லிய தானியத்தைக் கொண்ட பாஸ்மதி இரகமாகும். சமைத்த பின் தானியத்தின் நீளம் மேலும் அதிகரிக்கும் தன்மை இதன் சிறப்புகளில் ஒன்றாகும். இதன் வளர்ச்சியுடன் பாஸ்மதி ஏற்றுமதி வருவாய் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்ததாக இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் பதிவு செய்கிறது.

பூசா பாஸ்மதி 1121-ஐ அடிப்படையாகக் கொண்டு நோய் எதிர்ப்புத் தன்மை கொண்ட பூசா பாஸ்மதி 1885 போன்ற புதிய ரகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**Basmati உலகின் வாசனைமிக்க இந்திய அடையாளம்**

Basmati என்பது நீண்ட, மெல்லிய தானியம், தனித்துவமான நறுமணம், சுவை மற்றும் சமைத்த பின் நீளமாகும் தன்மை கொண்ட அரிசி வகையாகும்.

இந்தியாவின் பாஸ்மதி புவிசார் குறியீடு (GI) பகுதி பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம், உத்தரகாண்ட், டெல்லி, மேற்கு

உத்தரப் பிரதேசத்தின் 30 மாவட்டங்கள் மற்றும் ஜம்மு-காஷ்மீரின் 3 மாவட்டங்களை உள்ளடக்கியது.

2025-26 ஆம் ஆண்டில் இந்தியா 6.52 மில்லியன் மெட்ரிக் டன் Basmati அரிசியை ஏற்றுமதி செய்து, சுமார் US$ 5.67 பில்லியன் மதிப்பைப் பெற்றுள்ளது. சவுதி அரேபியா, ஈரான், ஈராக், ஐக்கிய அரபு அமீரகம், யேமன் மற்றும் அமெரிக்கா முக்கிய சந்தைகளாக இருந்தன.

**அறிவியலின் புதிய பரிணாமம்**

என் வளர்ச்சியில் அறிவியல் இன்னும் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது.

ICAR உருவாக்கிய டிஆர்ஆர் நெல் 100 (கமலா) மற்றும் பூசாடி எஸ்டி நெல் 1 போன்ற மரபணுத் தொகுப்பு முறையில் மேம்படுத்தப் பட்ட நெல் இரகங்கள், காலநிலைத் தாங்கு திறன், நீர் சேமிப்பு, உற்பத்தித்திறன் போன்ற பண்புகளை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளன.பூசா டிஎஸ்டி நெல் 1, சாம்பா மஹ்சூரி அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகவும், பூசா டிஎஸ்டி நெல் 1, எம்டியூ 1010 அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகவும் ICAR தெரிவித்துள்ளது. இதனால் என் எதிர்காலம் வெறும் அதிக மகசூல் என்பதோடு முடிவதில்லை. குறைந்த நீர், குறைந்த வளப் பயன்பாடு, காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறன் மற்றும் தரமான உணவு ஆகியவையும் என் எதிர்காலத்தின் முக்கிய இலக்குகளாக மாறியுள்ளன.

**என் எதிர்காலக் கனவு**

எதிர்காலத்தில் உலக மக்கள் தொகை அதிகரிக்கும் போது உணவுத் தேவையும் அதிகரிக்கும். அதே நேரத்தில் நீர் பற்றாக் குறை, மண்வளக் குறைவு, காலநிலைமாற்றம், தொழிலாளர் பற்றாக்குறை போன்ற சவால்களும் அதிகரிக்கலாம்.

**எனவே என்னை வளர்க்கும் விவசாயி :**

நீரைச் சேமிக்க வேண்டும். மண்ணை பாதுகாக்க வேண்டும். சரியான இரகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேவைக்கேற்ப உரம் பயன்படுத்த வேண்டும். பூச்சிக்கொல்லிகளைப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். இயந்திரங்களையும் நவீன தொழில் நுட்பத்தையும் பயன்படுத்த வேண்டும். அறுவடைக்குப் பிந்தைய இழப்பைக் குறைக்க வேண்டும். அப்போது தான் குறைந்த வளத்தில் அதிக தரமான உணவை உலகிற்கு வழங்க முடியும்.

**விவசாயியே என் உயிர்**

**என்னுடைய வெற்றிக்குப் பின்னால் மிகப்பெரிய கதாநாயகன் யார் தெரியுமா? விவசாயி தான்!.**

மழை வருமா என்று வானத்தைப் பார்த்துக் காத்திருப்பவர் அவர். வெயிலில் வயலில் உழைப்பவர் அவர். விதையை மண்ணில் போட்டு, அது பொன்னிறக் கதிராக மாறும் வரை பாதுகாப்பவர் அவர். நான் ஒரு நெல் மணியாக உங்கள் தட்டில் வருவதற்கு முன், பல மாதங்கள் ஒரு விவசாயியின் வாழ்க்கையோடு பயணிக்கிறேன். எனவே என்னை மதிப்பது என்பது உணவை மதிப்பது மட்டுமல்ல; விவசாயியின் உழைப்பையும் மதிப்பதாகும்.

**உணவை வீணாக்காதீர்!**

ஒரு கைப்பிடி அரிசியின் பின்னால் ஒரு விவசாயியின் உழைப்பு, நீர், மண், விதை, சூரிய ஒளி, மழை, நேரம் மற்றும் பணம் இருக்கின்றன. எனவே உணவை வீணாக்காமல் தேவையான அளவு மட்டுமே எடுத்துக்கொள்ளுங்கள்.

ஒரு நெல் மணியை மதிப்பது, ஒரு விவசாயியின் வியர்வையை மதிப்பதாகும்.

**முடிவுரை :** நான் ஒரு சாதாரண தானியம் அல்ல. நான் உணவு. நான் உழவனின் நம்பிக்கை. நான் தமிழரின் பண்பாடு. நான் இந்தியாவின் வேளாண் பெருமை. நான் உலக வர்த்தகத்தின் முக்கியப் பொருள். நான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு களம். சிறிய விதையாகத் தொடங்கிய என் பயணம், வயலைத் தாண்டி உலக நாடுகளின் உணவுத் தட்டுகளையும் சென்றடைந்துள்ளது. ஆனால் என் வாழ்க்கையின் உண்மையான பெருமை ஒரு விசயத்தில் தான் உள்ளது.

நான் விளைந்தால் மனிதன் பசியாறுகிறான்;
விவசாயி வாழ்ந்தால் நான் தொடர்ந்து விளைகிறேன்.

‘வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக்குடி உயரும்‘ என்ற ஔவையின் வாக்குக்கு ஏற்ப, மக்களின் வாழ்வை உயர்த்துவதே என் லட்சியம். என்னை உருவாக்க விவசாயி சிந்திக்கும் ஒவ்வொரு துளி வியர்வையையும் மதித்து, உணவை வீணாக்காமல் உண்ண வேண்டும் என்பதே என் அன்பான வேண்டுகோள்! இதுவே என் வரலாறும், என் நிகழ்காலமும், என் எதிர்காலக் கனவும் ஆகும்.

நெல்லைக் காப்போம்! உணவுப் பாதுகாப்பைக் காப்போம்!!

தகவல் தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்.***


கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333